பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
18 03 2025 **TUESDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரயாக்ராஜ் மகா கும்பமேளா இந்தியாவின் வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. நாக்பூர் வன்முறை தொடர்பாக 47 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மஹாராஷ்ட்டிரா அமைச்சர் திரு. யோகேஷ் கடம் தெரிவித்துள்ளார்.

4. எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, தமிழக மீனவர்கள் 3 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

5. சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் தன்வி கண்ணா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

உத்தரபிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்ற மகா கும்பமேளா இந்தியாவின் வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கும்பமேளா குறித்து உரையாற்றிய அவர், உலகின் மிகப்பெரிய இந்த ஆன்மிக விழாவை வெற்றியடையச் செய்த பக்தர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொண்டார்.

மகாகும்பமேளாவை வெற்றிகரமாக நடத்தியிருப்பது உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்திருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

நாட்டின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் ராய்சினா பேச்சுக்களில் இன்று பங்கேற்றுப் பேசிய அவர், ஒழுங்கு நிலைப்பாட்டை கடைபிடிக்காத எந்தவொரு நாடும் அதன் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று தெரிவித்தார்.

காஷ்மீரின் ஒரு பகுதியை பாகிஸ்தான் சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள விவகாரத்தில் ஐ.நா-வின் அணுகுமுறையை விமர்சித்த திரு. ஜெய்சங்கர், இந்த விவகாரத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகளின் நிலைப்பாடு குறித்தும் கேள்வி எழுப்பினார்.

மியான்மர் மற்றும் மேற்கத்திய நாடுகளில் நடைபெறும் ராணுவ புரட்சி தொடர்பான உலக நாடுகளின் அணுகுமுறையில் மாற்றம் தேவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக, உலகளாவிய ஒழுங்குமுறைகளை வகுக்க வேண்டியது அவசியம் என்றும் திரு. ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

இந்த பேச்சுக்களில் பங்கேற்ற அமெரிக்க தேசிய புலனாய்வு அமைப்பு இயக்குநர் திருமதி. **Tulsi Gabbard,** வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தியாவின் ஜனநாயக மாண்புகள் இந்தியா – அமெரிக்காவின் நட்புறவுக்கு அடித்தளமாக திகழ்கிறது என்றார்.

இந்திய-அமெரிக்க மக்களிடையேயான உறவு, மதம், இனம், அரசியல் மற்றும் சமூக அந்தஸ்திற்கு அப்பாற்பட்டது என்றும் திருமதி. **Tulsi Gabbard** தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

தில்லி சட்டப்பேரவையை முன்மாதிரி சட்டப்பேரவையாக திகழச் செய்ய வேண்டுமென்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

தில்லி சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்களுக்கான இரண்டு நாள் பயிலங்கை இன்று அவர் தொடங்கி வைத்து பேசினார்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களது தொகுதி மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் பணியாற்றுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

தில்லியில் பல்வேறு மொழி, கலாச்சாரம் மற்றும் மதங்களைச் சேர்ந்த மக்கள் வசிப்பதை சுட்டிக்காட்டிய அவர், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, சமுதாய நலனுக்காக பாடுபடுவது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் திரு. ஓம் பிர்லா கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

மஹாராஷ்ட்ர மாநிலம், நாக்பூரில் இருதரப்பினருக்கு இடையே நேற்று ஏற்பட்ட மோதல் தொடர்பாக 47 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக அம்மாநில அமைச்சர் திரு. யோகேஷ் கடம் தெரிவித்துள்ளார்.

வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை இன்று நேரில் ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த வன்முறையில் காவல்துறையினர் 14 பேரும், பொதுமக்கள் 3 பேரும் காயமடைந்துள்ளதாக கூறினார்.

வன்முறைச் சம்பவத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காவல்துறையினர் உடனடி நடவடிக்கை மேற்கொண்டதன் காரணமாக தற்போது அங்கு நிலைமை கட்டுக்குள் இருப்பதாகவும், வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. யோகேஷ் கதம் தெரிவித்தார்.

இதற்கிடையே, நாக்பூரில் உள்ள நந்தன்வன், ஷகார்தாரா உள்ளிட்ட 10 காவல்நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக நாக்பூர் மாநகர காவல்துறை ஆணையர் திரு. ரவீந்தர் குமார் சிங்கால் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணிகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் புதுதில்லயில் இன்று ஆலோசனை மேற்கொள்கிறார்.

இந்தக் கூட்டத்தில் இந்திய தனித்துவ அடையாள அட்டை ஆணையத்தின் தலைமைச் செயல் அதிகாரி, மத்திய உள்துறை செயலாளர், மத்திய சட்டத்துறை உயரதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

>>>>>><<<<<<

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, தமிழக மீனவர்கள் 3 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் படகும் பறிமுதல் செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கார்த்திகேயன் 38 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டப் பணியாளர்களின் தினசரி ஊதியத்தை 400 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று காங்கிரஸ் நாடாளுமன்ற குழுத்தலைவர் திருமதி. சோனியா காந்தி வலியுறுத்தியுள்ளார்.

மாநிலங்களவையில் நடைபெற்ற விவாதத்தில் பேசிய அவர், இந்த திட்டத்தில் பணியாற்றுவோருக்கு உரிய நேரத்தில் ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்றார்.

இந்த திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் என்றும் திருமதி. சோனியாகாந்தி கேட்டுக் கொண்டார்.

இதனிடையே, தொகுதி மறுசீரமைப்பு குறித்து விவாதிக்க அனுமதி மறுக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக உறுப்பினர்கள் இன்று மக்களவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் ஒரு சட்டப்பேரவை தொகுதிக்கு இரண்டு தடுப்பணைகள் வீதம் கட்டப்படும் என்று நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், மழைக்காலங்களில் தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படாமல் தடுக்க புதிய தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

தாமிரபரணி உள்ளிட்ட முக்கிய ஆறுகளின் குறுக்கே முன்னுரிமை அடிப்படையில் தடுப்பணை கட்டப்படும் என்றும் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த நெடுஞ்சாலைத்துறைஅமைச்சர் திரு. எ.வ.வேலு, திருச்செந்தூர், ராமேஸ்வரம், திருச்செங்கோடு போன்ற ஆன்மிக தலங்களில் புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் கிரிவலப்பதையை அகலப்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் திரு. எ.வ. வேலு தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மஹாராஷ்ட்ர மாநிலத்தில் உள்ள பஞ்சாயத்து அமைப்புகளுக்கான 620 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு விடுவித்துள்ளது.

15வது நிதிக்குழுவின் பரிந்துரை அடிப்படையில் இந்த நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

இதில், 2024-25ஆம் ஆண்டுக்கான நிதியாக 611 கோடியே 69 லட்சம் ரூபாயும், ஒருங்கிணைந்த நிதியின் முதல் தவணையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 8 கோடியே 42 லட்சம் ரூபாயும் விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய பஞ்சாயத்துராஜ் அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமப்பகுதிகளில் துப்புரவு, குடிநீர் விநியோகம், மழைநீர் சேகரிப்பு மற்றும் தண்ணீர் மறுசுழற்சி போன்ற பணிகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் பெண்கள் குழந்தைகள் உட்பட 200க்கு மேற்பட்ட பாலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.

இஸ்ரேலுக்கும், ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையேயான போர் நிறுத்தத்தை நீட்டிப்பது குறித்து எந்த முடிவும் எட்டப்படாத நிலையில், இஸ்ரேல் படைகள் தங்களது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளன.

**>>>>>><<<<<<**

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் தன்வி கண்ணா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 11-5, 11-5, 11-9 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் **Lea Barbeau-**வை வென்றார்.

இதர மகளிர் ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் ஷமீனா ரியாஸ், ராதிகா ஆகியோரும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் சூரஜ்குமார், ராகுல் பைத்தா ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**>>>>>><<<<<<**

**Nicosia** மகளிர் கிராண்ட் பிரி செஸ் போட்டியில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் மற்றும் **Harika Dhronavalli** பங்கேற்ற ஆட்டங்கள் டிராவில் முடிவடைந்தன.

சைப்ரஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 3வது சுற்றில் திவ்யா தேஷ்முக் - ரஷ்யாவின் **Alexandra** இடையேயான ஆட்டமும், **Harika Dronavalli –** சீனாவின் **Zhu Jiner** இடையேயான ஆட்டமும் டிாவில் முடிவடைந்தன.

**>>>>>><<<<<<**